1981 ஆகஸ்ட் 24]

கரித்திருக்கிறது; ஆனால் தமிழ்நாட்டில் 17.23 அதிகரித்திருக்கிறது. ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தைத் தமிழக அரசு அல்லது தமிழக மக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. பாராளுமன்றத்தில் ஒரு சீட் குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். ஒரு சீட் அல்ல ; முன்பு 41 இடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தன; தற்பொழுது அது 39 ஆக ஆகியிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஜே. எஸ். இராசு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் ஆகியவர்கள் கேட்ட கேள்விகளுக்கு டீலிமிடேஷன் கமிட்டி இதைப்பற்றி ஆராயும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த டீலிமிடேஷன் கமிட்டி ஆராய்வதற்கு 71 ஆவது ஆண்டு எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக்கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்துக்கொள்ளுமா அல்லது இப்பொழுது 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, டீலிமிடேஷன் கமிட்டி பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும்- 1981 ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கின் அடிப்படையில் டீலிமிடேஷன் கமிட்டி வரும்.

மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகட்டும் திட்டம்

*வினா எண் 25 திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் சர்வே எண் 3786, 3787 மற்றும் 3789 இல் உள்ள 8 ஏக்கர் 79 சென்ட் பரப்பளவுள்ள நிலம் 1979 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு ஊழியர்

கள் வீட்டுவசதி வாடகைத் திட்டத்தின்கீழ், அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக வீட்டு வசதித் துறைக்கு நிலக் கிரயம் பெறாமல் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள ஆதி திராவிடர்களின் கோரிக்கையை ஏற்று அரசு ஊழியர்களின் வீட்டு வசதித் திட்டத்திற்கு மாற்றிய நிலத்தின் பரப்பளவை 8.79 ஏக்கரிலிருந்து 4.97 ஏக்கராகக் குறைத்தும், மீதியுள்ள 3 ஏக்கர் 82 செண்ட் நிலத்தை, ஆதி திராவிட ஆக்கிரமிப்பாளர்களில் தகுதியுள்ளவர்களுக்கு வீட்டு மனையாகவும் ஒப்படை செய்திருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளன்று அமைச்சருக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பம்பற்றி நான் கேள்வி கேட்டிருக்கிறேன். ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்து உடனடியாக அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான திட்டத்தை அமுல் படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே நிலம் பூராவையும் ஆதி திராவிடர்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருந்ததால், வீட்டு வசதி வாரியத்தால், அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டக் கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆதி திராவிடர்கள் நாங்கள் குடியிருக்கிறோம் என்று மனுக் கள் கொடுத்தார்கள். அதன்பேரிலே தடை உத்தரவு போடப் பட்டது. அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைக்கேட்டு அவருடைய பரிந்துரையின் பேரிலே, முதலிலே 8.79 ஏக்கர் நிலம் வீட்டு வசதித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு 4.97 ஏக்கர் போதுமானது என்று கருதி, மீதி 3.82 ஏக்கர் நிலம் ஆய்ந்து ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்

*வினா எண். 26—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர் களுக்கும் அதற்குப்பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய் வூதியத் தொகை அளிப்பதில் வித்தியாசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை ஒருமுகப்படுத்த அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன?